வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C No.5/2023

வழக்கு சாட்சி – PW – 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.முரளி | தொழில் | :: |
| தந்தை பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | : | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 05.08.2024.

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

முதல் விசாரணை (நேரம் : நண்பகல் 12.07 மணி)

நான் தற்போது இராமநாதபுரம் வாலாந்தரவை கிராமத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சா.ப.சாட்சிகள் 2 பூமிநாதன், 3 சுந்தரி, 4 பாலமுருகன் ஆகியோரை தெரியும். அஜர் எதிரியை தெரியும். அவரும் எனது உறவினர். எதிரி மீது நான் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். கடந்த 02.04.2022ம் தேதி இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையத்திற்கு நானும், நாகேந்திரன், எதிரி கார்மேகம் ஆகிய மூவரும் மதியம் 3.00 மணிக்கு பச்சை குத்துவதற்காக சென்றிருந்தோம். எனக்கு பச்சை குத்திய பிறகு நாகேந்திரன் தான் பச்சை குத்தியதற்கான தொகையை கொடுத்தார். எதிரி கார்மேகம் தானும் பச்சை குத்த வேண்டும் என்றும் அதற்கு நாகேந்திரன் பணம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டார். நாகேந்திரன் தன்னால் தரமுடியாது என கூறியதால் அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. நான் இருவரையும் சண்டை

வேண்டாம் என்று பிரித்துவிட்டேன் அப்போது என் மீது கோபம் கொண்ட எதிரி என்னுடன் சண்டைக்கு வந்தார். அங்கிருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். அதன்பிறகு நானும் எதிரியும் சமரசமாகி எங்கள் ஊரான வாலாந்தரவைக்கு இருசக்கர வாகனத்தில் சேர்ந்தே சென்றோம். நாகேந்திரன் தனியாக ஊருக்கு வந்தார். அன்றையதினம் ஊருக்கு சென்றபிறகு மாலை 4.30 மணியளவில் நானும், எதிரியும் எங்கள் ஊரில் உள்ள இரட்டை புளியமரத்தில் மது அருந்தினோம். மது அருந்திய பிறகு எதிரி, நாகேந்திரன் பச்சை குத்த பணம் கொடுக்காததற்கு நான் தான் காரணம் என என்னுடன் சண்டை போட்டார். அதோடு உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என கூறிவிட்டு சென்றுவிட்டார். நானும் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன்பின்பு அதேதினம் இரவு 9.00 மணியளவில் எதிரி கார்மேகம் எனக்கு போன் செய்து என் வீட்டிற்கு வாடா என கூப்பிட்டார். நானும் எதிரி வீட்டிற்கு சென்றேன். அப்போது எதிரி இங்கேயும் வந்துவிட்டியாடா என்று கூறி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்தா அரிவாளை எடுத்து இத்தோடு தொலைடா தாயோழி என்று கூறி கழுத்தை நோக்கி வெட்டினார். அதை நான் தடுத்தபோது அந்த வெட்டானது எனது வலது தோள்பட்டையிலும், வலது முழங்கைக்கு மேல் பகுதியிலும், வலது மணிக்கட்டிற்கு சற்று மேல் பகுதியிலும் பட்டு காயங்கள் ஏற்பட்டது. எதிரி வெட்டியபோது என் கையால் தடுக்கவில்லை என்றால் அந்த வெட்டு என் கழுத்தில் பட்டு என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். நான் சத்தம் போட்டவுடன் என் அண்ணன் பூமிநாதனும், மைத்துனர் பாலமுருகனும், அம்மா சுந்தரி ஆகிய மூவரும் மற்றும் கிராமத்தார்கள் சுற்றி வளைத்தவுடன் நீ தப்பித்து விட்டாய் டா என கூறி

எதிரி ஓடிவிட்டார். என் உடன்பிறந்த அண்ணன் சரவணம் இருசக்கர வாகனத்தில் என்னை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார். நான் சிகிச்சையில் இருக்கும்போது கேணிக்கரை போலீசார் வந்து என்னை விசாரித்து நான் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். நான் சொல்லச்சொல்ல போலீசார் எழுதி என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் சொன்னபடியே வாக்குமூலம் இருந்ததால் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என் அண்ணன் சரவணன் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1**. இரண்டு நாட்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அதன்பிறகு இராமநாதபுரத்தில் உள்ள கலீல்ரஹ்மான் என்ற மருத்துவரிடம் ஒரு மாதம் சிகிச்சை பெற்றேன். என்னை எதிரி வெட்டியதாக சொல்லப்படும் அரிவாளை காட்டினால் அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியும்.

(வழக்கு சொத்தான அரிவாள் கீழமை நீதிமன்றத்திலிருந்து வரவில்லை என்பதால் அதை தாக்கல் செய்ய முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்/-சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.